| அ.வ.எண். | 91/2015 |
| --- | --- |
| பெயர் | சதாசிவம் |
| தந்தை பெயர் | ரத்தினம் |
| சாட்சி | பி.வா.சா.1 |
| நாள் | 17.03.2020 |

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தாவா கிராமத்தில் 2 1/2 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறேன். நான் முதல் விசாரணை சாட்சியம் அளிப்பதற்கு முன்பு வழக்கு சர்வே எண்.284/2 பி11 பி–யை பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். மேற்படி சர்வே எண்ணில் முந்தைய சர்வே எண் என்னவென்றால் 284/2 பி11. எந்த ஆண்டு ஏ மற்றும் பி என உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் 2012 ல் அவ்வாறு உட்பிரிவு செய்யப்பட்டது. டிகே/8 ஏ/80/1422/நாள்.27.07.2012 உத்தரவின் கீழ் அவ்வாறு உட்பிரிவு செய்யப்பட்டது. யாருடைய மனுவின் பேரில் அவ்வாறு உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் ராஜீ மகன் சரவணன் என்பவர் மனுவின் பேரில் உத்தரவிடப்பட்டது. மேற்படி சர்வே எண்.284/2 பி11 பி சரவணனுக்கு பாத்தியப்பட்டதல்ல என்றால் ஆமாம். சர்வே எண்.284/2 பி11 பி–யை முறையாக அளந்து உட்பிரிவு செய்திருந்தால் வண்டிப்பாதையை காலியிடம் என குறிப்பிட்டிருக்கமாட்டோம் என்றால் 201 சதுர மீட்டர் போக 44.5 சதுர மீட்டரை காலியிடமாக வைத்திருந்ததால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளோம். சர்வே எண்.284/2 பி6 என்ன வகைப்பாட்டை சார்ந்தது என்றால் பாதை என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அது 90 சதுர மீட்டர் என குறிப்பிடப்பட்டுள்ளது. நீளம் மற்றும் அகலம் குறிப்பிடப்படவில்லை. சிந்தாமணியூர் செல்லும் பஞ்சாயத்து பாதைக்கு தெற்கு புறமாக 284/2 பி6 அமைந்துள்ளது என்றால் ஆமாம். சர்வே எண்.284/2 பி6–க்கு கிழக்கு பக்கம் தான் சர்வே எண்.284/2 பி11 பி உள்ளது என்றால் ஆமாம். சர்வே எண்.284/2 பி11 பி–க்கு தெற்கு புறம் சர்வே எண்.284/4 ஏ சந்திரசேகர் பெயரில் உள்ளது. வாதி காலங்காலமாக பஞ்சாயத்து ரோட்டிற்கு தெற்கு புறமாக அமைந்துள்ள சர்வே எண்.284/2 பி6 வண்டிப்பாதை வழியாக சென்று அதன் தொடர்ச்சியாக கிழபுறம் அமைந்துள்ள சர்வே எண்.284/2 பி11 பி வழியாக சென்று அவர்களுடைய சொத்தான சர்வே எண்.284/4 ஏ–

க்கு சென்று வருகின்றனர் என்றால் வண்டிப்பாதை குறிப்பிடப்படவில்லை. சந்திரசேகருக்கு பட்டா மாறுதல் செய்யும் போது இயற்கை தன்மையை பார்த்தும், அளந்து பார்த்தும் கொடுத்தார்களா என்றால் அந்த சமயத்தில் அங்கு நான் பணிபுரியவில்லை. முன்பிருந்த ஆவணங்களை பார்க்காமலும், முறையாக பார்வையிடாமலும் 1ம் பிரதிவாதியின் சொத்திற்கருகே வழக்கு சொத்து உள்ளதால் தவறாக காலியிடம் வகைப்பாடு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களின்படிக்கு சர்வே எண்.284/2பி11பி வண்டிப்பாதையாக தான் வாதி பயன்படுத்தி வருகிறார் எனவும், ஆகவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையாளர் தன்னுடைய அறிக்கையில் சர்வே எண்.284/2பி11பி வண்டிப்பாதை என தான் குறிப்பிட்டுள்ளார் எனவும், ஆகவே என்னுடைய வருவாய்த்துறை ஆவணங்கள் தவறு என்றால் சரியல்ல. வருவாய்த்துறை ஆவணங்களில் தவறு இருந்தால் அதனை திருத்த உத்தரவிடும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு தான் உள்ளது என்பதால் வாதி சரியாக தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நீதிமன்ற உத்தரவிடும் கட்டளை படிக்கு செயல்பட நாங்கள் தயாராக உள்ளோமா என்றால் தயாராக உள்ளோம்.

**ஓம்/-திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேட்டூர்.**